**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 171/2021 |
| Name | : Shek Dawood |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.08.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சோழமாதேவியில் வசித்து வருகிறேன். மெக்கானிக்காக வேலை செய்கிறேன். 16.09.2019 ம் தேதி 12.15 மணிக்கு மடத்துக்குளம் யூனியன் ஆபிஸ் அருகே முன்தினம் நடைபெற்ற விபத்து குறித்து விசாரித்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் ஜெயபிரகாஷ் என்பவர் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. விபத்து பற்றி எழுதியிருப்பதாக சொன்னார்கள்.

வரைபடத்தில் சம்பவ இடமாக எந்த இடத்தை காட்டியுள்ளார்கள் என்றால் எங்கள் ஒர்க் ஷாப்பிற்கு எதிராக காட்டியிருந்தார்கள். போலீஸ் விசாரணை செய்த போது அந்த இடத்தில் உடைந்த பாகங்களோ, ரத்தக் கறையோ, டயர் அச்சு இருந்ததா என்றால் அதைப் பற்றி தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகில் நான் ஒர்க் ஷாப்பில் வேலையில் இருந்ததால் காவல் நிலையம் வரச்சொல்லி கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்